2006 ஜனவரி 21]

(ஆ) தமிழ்நாடு தொழிற்கல்வி படிப்புகளில் சேர்க்கையை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கான சட்டமுன்வடிவு, 2006

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிற்கல்வி படிப்புகளில் சேர்க்கையை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கான சட்டமுன்வடிவு. மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிற்கல்வி படிப்புகளில் சேர்க்கையை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கான சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(இ) திருவள்ளுவர் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2006 ஆம் ஆண்டு திருவள்ளுவர் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.